# மறைசாட்சி தேவசகாயம் திருவிழா - மறைமாவட்டப் பெருவிழா ஆரல் குருசடி நோக்கி மறைமாவட்டத் திருப்பயணம் 14.01.2022

**கிறிஸ்து இயேசுவில் என் அன்புக்குரிய சகோதரிகளே, சகோதரர்களே!**

### நமது மண்ணின் மறைசாட்சி

“நானே அவர்கள் கடவுள்! அவர்கள் என் மக்கள்!” என்றுரைத்து இறை உறவில் நிலைத்து வாழ அழைப்பு கொடுக்கும் தந்தை கடவுளின் அன்பு உங்களோடு இருப்பதாக!

மறைசாட்சி தேவசகாயம் 'புனிதர்' என அறிவிக்கப்பட்டு, விழா கொண்டாடுவதற்கு அனைவரும் தயாராக இருக்கின்ற இந்நாட்களில், அவரின் விழாவை மறைமாவட்ட விழாவாகக் கொண்டாட இருக்கும் இவ்வேளையில், உங்கள் அனைவரையும் இவ்விழாவிற்கு அழைப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

### நமது மண்ணின் மறைசாட்சி

இன்றைய குமரி மாவட்டமாகிய அன்றைய “தென் திருவிதாங்கூர்” பகுதியில் நட்டாலம் என்னும் அழகிய சிற்றூரில் 1712ஆம் ஆண்டு ஏப்ரல் 23இல் பிறந்தவர்தாம் நம் மறைசாட்சி. வாசுதேவன், தேவகி அம்மாள் ஆகியோர் அவரது பெற்றோர்; அவர்கள் நம் அருளாளருக்கு வைத்த பெயர் “நீலம்”. அதுவே பிறகு நீலகண்டன் என்றும் அவருக்கு வழங்கப்பட்டது. பல மொழிகளையும் கலைகளையும் ஆசிரியர்களிடமிருந்தும் ஆசான்களிடமிருந்தும் கற்றுத் தேர்ந்த நீலகண்டன் முதலில் திருவிதாங்கூர் படைவீரராகவும், அதனைத் தொடர்ந்து, அவரது நற்பண்புகளை முன்னிட்டு, அரசரின் அரண்மனை ஊழியராகவும் பணியாற்றி வந்தார். தக்க வயதில் பார்கவி என்பவரை மணம் முடித்து இல்லற வாழ்வைத் தொடங்கினார் நீலகண்டன்.

1741இல் மார்த்தாண்ட வர்மா வென்றெடுத்த குளச்சல் போரில் மன்னரிடம் சரணடைந்த டச்சு வீரர்களுள் ஒருவர்தான் பெனதிக்து டிலனாய். போர்க் கைதியாக இருந்தாலும் தமது திறமையாலும் நம்பகத்தன்மையாலும் மார்த்தாண்டவர்மாவுக்கு ஏற்றவராகி, அவர்தம் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு படையில் உயர் பொறுப்பும் தரப்பட்டார். “வலியகப்பித்தான்” என்று மதிப்புடன் அழைக்கப்பட்ட டிலனாய், நல்லதொரு கத்தோலிக்கர்.

டிலனாயும் நீலகண்டனும் நண்பர்கள் ஆயினர். இக்காலகட்டத்தில் வாழ்வில் எதிர்பாராத பெரும் கடினங்களுக்கு உள்ளானார் நீலகண்டன். நண்பராகிய

டிலனாயிடம் தன் துன்பக் கதைகளைப் பகிர்ந்துகொண்டார். டிலனாய் அவருக்கு ஆறுதல் கூறி யோபுவின் வரலாற்றையும் இயேசுவின் புனித பாடுகளையும் மறைசாட்சியரின் தியாகங்களையும் எடுத்துக் கூறினார். இதனால் ஆண்டவராகிய இயேசுவிடம் ஈர்க்கப்பட்டு திருமுழுக்குப் பெற விரும்பினார் நீலகண்டன். அவரது மறைக்கல்விக்கும் திருமுழுக்கிற்கும் ஏதுவாக அவரை வடக்கன்குளத்திற்கு அனுப்பி வைத்தார் டிலனாய்.

வடக்கன்குளத்தின் மறை அறிவிப்புப் பணியகப் பொறுப்பில் இருந்தவர் அருள்பணி. யோவான்னி பாப்டிஸ்ட் புத்தாரி. திருமுழுக்குப் பெறுவதில் உறுதியாக இருந்த நீலகண்டனுக்கு 9 மாதங்களாக மறைக்கல்வி கற்றுத் தந்து, 1745ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் நாள் வடக்கன்குளத்தில் திருமுழுக்கு வழங்கினார். திருமுழுக்கில் அவருக்குக் கொடுக்கப்பட்ட பெயர்தான் தேவசகாயம். ‘‘தேவசகாயம்’’ என்பது நற்செய்தியில் நாம் காணும் ‘‘லாசர்’’ என்ற பெயரின் தமிழாக்கம் ஆகும்.

தேவசகாயத்திற்கு உண்மையான மனமாற்றமாகவும், வாழ்வின் மாற்றமாகவும் அவர் பெற்ற திருமுழுக்கு இருந்தது. இயேசுவின் சீடராக மாறியதில் பேருவகை கொண்டார். ‘‘யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’’ என்ற திருமந்திரச் சொற்களுக்கேற்ப இயேசுவின் நற்செய்தியைத் தேவசகாயம் தம் வாழ்வால் அறிவிக்கத் தொடங்கினார். மூட நம்பிக்கைகளையும் சாதியின் அடையாளங்களையும் துறந்தார். எல்லாரையும் தம் உடன் பிறப்புக்களாக ஏற்று தீண்டாமை தவிர்த்து அனைவருடனும் உறவாடினார்.

இவரது வாழ்வால் ஈர்க்கப்பட்டு முதலில் மாற்றம் பெற்றவர் அவரது மனைவி பார்கவி. அவர் திருமுழுக்குப் பெற்று ‘‘தெரசம்மாள்’’ என்னும் பெயர் பெற்றார். சில படைவீரரும் கிறிஸ்தவர் ஆயினர். இதெல்லாம் அரசருக்கும் அரசவைக்கும் ஏற்கவில்லை. அவர் 1749ஆம் ஆண்டு பெப்ருவரி 23ஆம் நாள் அரசனின் படைவீரர்களால் கைது செய்யப்பட்டார்.

அதுமுதல் இறுதியில் ஆரல்வாய்மொழி காற்றாடிமலையில் 14011752இல் சுட்டுக் கொல்லப்பட்டதுவரை, மறைசாட்சி தேவசகாயம் பல துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்டார். மனிதன் இருப்பதற்குத் தகுதியற்ற குறுகலான சிறையில் அடைக்கப்பட்டார். இருமுறை சாவுக்குத் தீர்ப்பிடப்பட்டார். எருமையில் அமர வைத்துப் பல இடங்களுக்கு இழுத்துச் செல்லப்பட்டார். பிரம்புகளாலும் முள்சாட்டையாலும் அடிக்கப்பட்டார். காயங்களிலும் நாசிகளிலும் மிளகு வைத்துத் தேய்க்கப்பட்டது. பசி, தாகத்தால் அவதிப்பட்டார். கைவிலங்குகளுடன் தாலூக்காகளிலும் மற்றும் முக்கிய இடங்களிலும் இழுத்துச் செல்லப்பட்டார்.

இத்தகைய கொடிய துன்பங்களிலும் தேவசகாயம் இயேசுவின் நற்செய்தியையே பேசினார். தம்மைத் துன்புறுத்தியவர்களுக்கு ஆசி வழங்கினார். வெள்ளிக் கிழமைகளில் இயேசுவின் பாடுகளை முன்னிட்டும், சனிக்கிழமைகளில் வியாகுல அன்னையின் நினைவாகவும் உண்ணா நோன்பிருந்தார். எத்துன்பமும் அவரது நம்பிக்கையின் உறுதியையும் மகிழ்ச்சியின் தன்மையையும் அசைக்க முடியவில்லை. அவர் கொல்லப்பட்டு, அவரது உடல் காட்டு விலங்குகளுக்கு இரையாகப் போடப்பட்டது. சில நாட்களுக்குப் பின்னரே மக்கள் அவ்வுடலைக் கண்டெடுத்து, கோட்டாறு சவேரியார் ஆலயத்திற்குக் கொண்டு வந்து பீடமுற்றத்தின் முன்னே அடக்கம் செய்தனர்.

### புனிதர் பட்டத் திருப்பணிகள்

மறைசாட்சி தேவசகாயத்தின் புனிதர் பட்டத்திற்கான முயற்சிகள் 1986லேயே அப்போதைய ஆயர் மேதகு ஆரோக்கியசாமி அவர்களால் தொடங்கப்பட்டு முறையான விண்ணப்பம் 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆயர் லியோன் தர்மராஜ் அவர்களால், உரோமைக்குத் தரப்பட்டது. உடனே "இறைஊழியர்" நிலையில் 22–11–2003இல் மறைமாவட்டத்தில் திருப்பணிகள் தொடங்கப்பட்டு மறைசாட்சியம்/முத்திப்பேறுநிலை (அருளாளர்) திருப்பணிகள் 2009இல் மேதகு ஆயர் ரெமிஜியுஸ் அவர்களால் இறுதி அமர்வு நடத்தப்பட்டு ஆவணங்கள் யாவும் உரோமைக்கு அனுப்பப்பட்டன.

உரோமையில் பணிகள் தொடரப்பட்டு, அதற்கான முழுமை அறிக்கை வரையப்பட்டு தேவசகாயத்தின் மறைசாட்சியம் அருளாளர் நிலை அறிவிப்பு, திருத்தந்தை 16 ஆம் பெனதிக்து அவர்களால் 2012, ஜூன் 28ஆம் நாள் கையெழுத்திடப்பட்டது. அதே ஆண்டு டிசம்பர் 2ஆம் நாள் சுமார் 4 இலட்சம் மக்கள் பங்கேற்ற மகிழ்வான நிகழ்வில், மறைசாட்சி தேவசகாயம் அருளாளராக மறைசாட்சியாக அறிவிக்கப்பட்டார்.

நமது மறைமாவட்டத்தில் மறைசாட்சி தேவசகாயத்தின்மீது அன்பும் பக்தியும் தொடர்ந்து வளர்ந்து வரும் நிலையில், புனிதர்நிலை அறிவிப்புத் திருப்பணிகள் யாவும் 2016ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நிறைவு செய்யப்பட்டு, ஆவணங்கள் அனைத்தும் உரோமைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

### மறைசாட்சி புனித தேவசகாயம்

இறைமக்களின் வேண்டுதலால் நம் மண்ணின் மறைசாட்சி தேவசகாயம் புனிதர் நிலையை அடைந்து இருக்கின்றார். 2022ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் தேதி அவருக்குப் புனிதர் பட்டம், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் உரோமை மாநகரில், வத்திக்கான் புனித பேதுரு சதுக்கத்தில் வழங்கப்பட இருக்கிறது. இதற்காக உள்ளத்தளவிலும், உடலளவிலும் நம்மைத் தயாரிப்பதற்கே நாம் அனைவரும் ஒரே மறைமாவட்ட சமூகமாகக் காற்றாடிமலை தேவசகாயம் மலையில் இணைந்து விழா

கொண்டாடவிருக்கின்றோம். வருகின்ற 14.01.2022, வெள்ளியன்று நாம் கொண்டாடுகின்ற விழா, நமது ஏக்கங்களை, எதிர்பார்ப்புகளை நிறைவுசெய்த ஆனந்தப் பெருவிழா. அந்த நாளை மறைமாவட்டத் திருப்பயண நாள் என்று கொண்டாடவும், ஆதலால் முழுமன நம்பிக்கையோடு இவ்விழாவில் கலந்து கொள்ளவும் உங்களை வேண்டுகின்றேன். எல்லா வேறுபாடுகளையும் கடந்து, முழு மன நம்பிக்கையுடன் இவ்விழாவில் பங்கெடுங்கள். விருப்பமான பல வடிவங்களில் (கலைப்போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள், பட்டி மன்றம், இதழ் வெளியீடு, குறும்படங்கள் தயாரிப்பு) நம் புனிதரைப் பற்றிச் சக மனிதருக்கு அறிவியுங்கள்.

மே 15, 2022 அன்று உரோமை மாநகரில் நடைபெறுகின்ற நம் புனிதரின் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ள விரும்புகின்றவர்கள், உங்களது பெயர்களை ஆயர் இல்லத்தில் அமைந்துள்ள புனிதர் பட்ட பணிச் செயலகத்தில் ரூ. 500/– நன்கொடையாகக் கொடுத்து பதிவு செய்து கொள்ளுங்கள். பயணக் கட்டணம் தோராயமாக ஒரு நபருக்கு 7 நாட்களுக்கு ரூ. 1,50,000/–மும், 15 நாட்களுக்கு ரூ. 2,50,000/–மும் நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கின்றது. ‘‘இந்திய மறைசாட்சி தேவசகாயம்’’ என்ற தலைப்பில் வெளி வந்து கொண்டிருக்கும் மும்மாத இதழை அனைவரும் வாங்கி வாசித்துப் பயனடையுங்கள்.

நமக்கு ஆகும் பெரும் செலவுகளுக்காக வழக்கம் போன்று மறைசாட்சி தேவசகாயத்திற்கு 2022, ஜனவரி 16ஆம் நாள் ஞாயிறு திருப்பலியின்போது காணிக்கை பிரிக்கப்பட்டு மறைமாவட்டப் பொருளரிடம் அனுப்பக் கேட்டுக் கொள்கிறேன்.

கிறிஸ்துவின் மனநிலையில்
**+ ஆயர் நசரேன் சூசை**
கோட்டாறு மறைமாவட்டம்

---